முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்**

# AA1 பரீட்சை – 2019 சனவரி

# (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

(ECONOMICS FOR BUSINESS AND ACCOUNTING)

2019-02-02
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):

  (1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
  *எழுதுதல் - 03 மணித்தியாலம்*

  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

  (3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட* ***விடைப்புத்தகத்தில்*** *பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரே மொழியில்*** *மட்டும் எழுதப்படல் வேண்டும்.*

  (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். ஏதாவது எடுகோள்கள் மேற்கொள்ளப் பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை மாத்திரம் அனுமதிக்கப்படும்.*

  (6) ***வரைபுத் தாள்*** *வழங்கப்படும்.*

  (7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு வினைச்சொல் உள்ளடங்கிருக்கிறது. (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

  (8) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 01

*இல.* ***1.1*** *முதல்* ***1.10*** *வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை வினா இலக்கத்துடன் உங்களது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வரும் கூற்றுக்களிலிருந்து, பொருளியலில் ‘‘அருமை (Scarcity)’’ என்னும் பதத்தினைச் சரியாக விபரிக்கின்ற கூற்றினைத் தெரிவுசெய்க.

(1) அருமை என்பது குறித்த தீர்மானமொன்றின் தெரிவில் முன்பிருந்த அடுத்த சிறந்த மாற்றுத் தெரிவின் பெறுமதி ஆகும்.

(2) அருமை என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதற்கான வளங்களின் மாற்றுப் பாவனை (alternative use) ஆகும்.

(3) அருமை என்பது பண்டமொன்றின் மேலதிக அலகொன்று நுகரப்பட்டதால் ஏற்பட்ட மொத்தப் பயனுக்கான சேர்ப்பனவு (addition to the total utility) ஆகும்.

(4) அருமை என்பது மனிதத் தேவைகள் மற்றும் வரையறையற்ற மனித விருப்பங்களுடன் தொடர்புடைய வளங்களின் வரையறுக்கப்பட்ட கிடைப்பனவு (limited availability of resources) ஆகும்.

**1.2** பொருள் $x$ மற்றும் பொருள் $y$ ஆகியவற்றுக்கிடையிலான கேள்வியின் குறுக்கு நெகிழ்ச்சி (cross elasticity of demand) நேரக் கணியமாக (positive) இருப்பின் அப்பொருட்கள்,

(1) நிரப்புப் பொருட்கள் ஆகும். (2) பிரதியீட்டுப் பொருட்கள் ஆகும்.
(3) சாதாரண பொருட்கள் ஆகும். (4) தரம்தாழ்ந்த பொருட்கள் ஆகும்.

**1.3** நிறைபோட்டியின் பண்பியல்புகள் தொடர்பான பின்வரும் கூற்றுக்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

**(a)** அதிகளவான நிறுவனங்கள் காணப்படுகின்றன.

**(b)** இங்கு ஓரினமான பொருட்கள் (homogeneous products) விற்பனை செய்யப்படுகின்றன.

**(c)** இங்கு நீண்டகால ஓட்டத்தில் சாதாரண இலாபங்கள் மாத்திரம் உழைக்கப்படுகின்றன.

மேலுள்ளவற்றுள், நிறைபோட்டியின் பண்பியல்புகள் தொடர்பில் சரியான கூற்றுக்கள் :

(1) **(a)** யும் **(c)** யும் மாத்திரம் (2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்
(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம் (4) மேலுள்ள எல்லாம்.

**1.4** பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் ஒரு நிறுவனம் அதன் இலாபத்தை உச்சப்படுத்துகிறது?

(1) விலையானது சராசரி மாறும் கிரயத்தைவிட குறைவாக இருக்கும்போது

(2) மொத்தக் கிரயம் எல்லைக் கிரயத்திற்குச் சமனாக இருக்கும்போது

(3) மொத்தக் கிரயம் மொத்த வருமானத்திற்குச் சமனாக இருக்கும்போது

(4) எல்லைக் கிரயம் எல்லை வருமானத்திற்குச் சமனாக இருக்கும்போது

**1.5** ஒப்பீட்டளவில் நெகிழ்ச்சியற்ற கேள்வியைக் கொண்டுள்ள பண்டமொன்றின் மீது அலகு வரி ஒன்றை விதிப்பது பின்வருவனவற்றுள் எதற்கு வழிவகுக்கும்?

(1) நுகர்வோர் மொத்த வரிச் சுமையையும் தாங்கிக்கொள்வதற்கு

(2) நுகர்வோர் வரிச் சுமையின் பெரிய பகுதியொன்றைத் தாங்கிக்கொள்வதற்கு

(3) நுகர்வோர் வரிச் சுமையின் சிறிய பகுதியொன்றைத் தாங்கிக்கொள்வதற்கு

(4) நுகர்வோர் வரிச் சமையின் சரிபாதி அளவினைத் தாங்கிக்கொள்வதற்கு

**1.6** பின்வருவனவற்றுள் அரசாங்கத்தின் பேரினப் பொருளாதார நோக்கமொன்றாக அமைவது எது?

(1) மொத்த நுகர்வு (2) பரிமாற்று வீதம்
(3) சென்மதி நிலுவைச் சமநிலை (4) வேலையின்மை

**1.7** பின்வருவனவற்றிலிருந்து சந்தை (முதலாளித்துவ) பொருளாதாரத்தின் சரியான பண்பியல்பினைத் (characteristic) தெரிவுசெய்க.

(1) நுகர்வோருக்கு இறையாண்மை (சுதந்திரம்) காணப்படாது.

(2) பொருளாதார நடவடிக்கைகள் ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டமிடல் குழுவினால் கையாளப் படுகின்றன.

(3) உற்பத்தியும் விநியோகமும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

(4) உற்பத்தியாளர்கள் இறையாண்மையைக் (சுதந்திரம்) கொண்டிருக்கின்றனர்.

**1.8** சராசரி மொத்தக் கிரய வளையியின் ஆககக் குறைந்த புள்ளியில்,

(1) சராசரி மொத்தக் கிரயமானது எல்லைக் கிரயத்திற்குச் சமனாக இருக்கும்.

(2) சராசரி நிலையான கிரயம் எல்லைக் கிரயத்திற்குச் சமனாக இருக்கும்.

(3) மொத்தக் கிரயம் சராசரி நிலையான கிரயத்திற்குச் சமனாக இருக்கும்.

(4) மொத்தக் கிரயம் எல்லை வருமானத்திற்குச் சமனாக இருக்கும்.

**1.9** 2017 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கு இணங்க, 2017 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் தனிநபர் வருமானம்

(1) 4,200 அமெரிக்க டொலர்   (2) 3,924 அமெரிக்க டொலர்

(3) 3,700 அமெரிக்க டொலர்   (4) 4,065 அமெரிக்க டொலர்

**1.10** சென்மதி நிலுவையின் வியாபாரக் கணக்கிலுள்ள நேர்க்கணிய மீதியானது,

(1) பொருட்களின் ஏற்றுமதிகளின் பெறுமதி, பொருட்களின் இறக்குமதிகளின் பெறுமதியைவிட அதிகமாக இருப்பதைக் குறிக்கின்றது.

(2) பொருட்களின் ஏற்றுமதிகளின் பெறுமதி, பொருட்களின் இறக்குமதிகளின் பெறுமதியைவிட குறைவாக இருப்பதைக் குறிக்கின்றது.

(3) பொருட்களின் ஏற்றுமதிகளின் பெறுமதி, பொருட்களின் இறக்குமதிகளின் பெறுமதிக்குச் சமனாக இருப்பதைக் குறிக்கின்றது.

(4) ஏற்றுமதி விலைச் சுட்டி, இறக்குமதி விலைச் சுட்டியைவிட குறைவாக இருப்பதைக் குறிக்கின்றது.

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையிலான பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் "**சரியானதா**" அல்லது "**தவறானதா**" என்பதைக் குறிப்பிடுக. உமது விடையினை (சரியானது / தவறானது) வினாவுக்குரிய இலக்கத்துடன் உமக்குத் தரப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** சமபயன் வளையியானது நிறுவனமொன்றின் மொத்தக் கிரயத்திற்கும் எல்லைக் கிரயத்திற்கும் இடையிலான தொடர்பினை விபரிக்கின்றது.

**1.12** வருமான விளைவு (income effect) என்பது கேள்வி வளையியின் கீழ்நோக்கிய சாய்வுக்கான (downward slope) ஒரு காரணமாகும்.

**1.13** பண்டமொன்றின் கேள்வித் தொகையில் ஏற்படுகின்ற மாற்றமானது அப்பண்டத்தின் விலையில் ஏற்படும் மாற்றத்திற்குச் சமனாக இருப்பின், கேள்வியின் விலை நெகிழ்ச்சியானது 1 இனை விட பெரியதாக இருக்கும்.

**1.14** உற்பத்தியாளர் மிகை என்பது, பண்டத்தின் சமநிலை விலைக்கும் உற்பத்தியாளர் விற்பனை செய்யத் தயாராகவிருக்கின்ற விலைக்குமிடையேயான வேறுபாடாகும்.

**1.15** வளங்களின் நிறை தொழில் என்பது உற்பத்திச் சாத்திய வளையியின் (PPC) உள்ளார்ந்த (underlying) எடுகோள் ஒன்றாகும்.

*இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.16** ....................... *(கலப்புப் பொருளாதாரம் / திட்டமிடப்பட்ட பொருளாதாரம்)* ஒன்றில், அரசாங்கமானது வரிகள் மற்றும் மானியங்கள் ஊடாக விலைகளில் செல்வாக்குச் செலுத்துவதுடன், நேரடியாகவும் மறைமுகமாகவும் விலைப் பொறிமுறையின் செயற்பாட்டில் தாக்கம் செலுத்துகின்றது.

**1.17** வேறுபட்ட உற்பத்திப்பொருட்கள் ....................... *(நிறைபோட்டி / தனியுரிமைப் போட்டி)* இனால் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**1.18** நுகர்வில் விலக்க முடியாத தன்மையும் போட்டியற்ற தன்மையும் ....................... *(பொதுப் பொருட்களின் [public goods] / தகுதிப் பொருட்களின் [merit goods])* ஏற்பாட்டினது முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.

**1.19** வெளிநாட்டு நாணயமாற்றுக்கான கேள்வி மற்றும் நிரம்பலின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் நாணயமாற்று வீதமானது ....................... *(நிலையான / மிதக்கும்)* நாணயமாற்று வீதம் என அழைக்கப்படுகின்றது.

**1.20** வைப்பாளர்களிடமிருந்து நிதி சேகரிக்கின்ற செயன்முறையும் கடன்பெறுநர்களுக்காக அவற்றை வழங்குகின்ற செயன்முறையும் ....................... *(நிதி உட்படுத்தல் [financial inclusion] / நிதி இடையீடு [financial intermediation)* என அழைக்கப்படுகின்றது.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

நான்கு (04) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) பண்டம் ஒன்றிற்கான பின்வரும் கேள்வி (Qd) மற்றும் நிரம்பல் (Qs) சமன்பாடுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

$$Qd = 200 - 2P$$

$$Qs = -40 + 6P$$

(i) பண்டத்தின் சமநிலை விலையினைக் (equilibrium price) **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(ii) பண்டத்தின் சமநிலைக் கணியத்தைக் (equilibrium quantity) **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(iii) ஏனைய விடயங்கள் மாறாதிருக்கும்போது மேலுள்ள பண்டத்திற்கான நுகர்வோரின் ஆர்வம் அதிலிருந்து விலகியிருப்பின் மேலே கணிப்பிடப்பட்ட சமநிலை விலை மற்றும் கணியத்தில் ஏற்படக்கூடிய தாக்கத்தினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) கேள்வியின் விலை நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கின்ற காரணிகள் மூன்றினை (03) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

(a) நிறுவனம் ஒன்றின் மூடுதல் புள்ளி (shutdown point) மற்றும் இலாப நட்டமற்ற புள்ளி (break-even point) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை வரைபொன்றைப் பயன்படுத்தி **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) (i) வர்த்தக வங்கியொன்றின் தொழிற்பாடுகள் மூன்றினைப் (03) **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(ii) இலங்கையிலுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான (licensed commercial banks) உதாரணங்கள் இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (01 புள்ளி)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) சமநிலை வட்டி வீதத்தில் (equilibrium interest rate) பணத்திற்கான கேள்வியில் ஏற்படுகின்ற அதிகரிப்பொன்றின் தாக்கத்தினை வரைபொன்றினைப் பயன்படுத்தி **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) கேள்வி உதைப்பு பணவீக்கம் (Demand Pull Inflation) மற்றும் கிரய தள்ளல் பணவீக்கம் (Cost Push Inflation) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) பண நிரம்பலை முகாமை செய்வதில் அளவுசார் கட்டுப்பாடொன்றாக திறந்த சந்தை நடவடிக்கைகள் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) பாதுகாப்புவாதத்தின் (protectionism) பிரதிகூலங்கள் இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் அண்மைய மதிப்பிறக்கத்திற்கான பிரதான காரணங்கள் இரண்டினை (02) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

(A) (a) அரச தொழில்முயற்சி நிறுவனங்களின் (public enterprises) பிரதிகூலங்கள் இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) அரசாங்கப் பாதீட்டின் பிரதான நோக்கங்கள் நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(B) பொருளாதாரமொன்றின் தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய ஒரு வருட காலப்பகுதிக்கான பின்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | **ரூ. மில்லியனில்** |
|---|---|
| ஊழியர்களுக்கான நட்டஈடு | 2,000 |
| நிகர தொழிற்பாட்டு மிகை | 1,000 |
| கலப்பு வருமானம் (Mixed income) | 1,100 |
| உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் மீதான நிகர வரிகள் | 750 |
| நிகர வெளிநாட்டு நடைமுறை மாற்றல்கள் (Net foreign current transfers) | 550 |
| நிகர வெளிநாட்டு முதன்மை வருமானம் | 1,200 |
| நிகர நேரில் வரி | 150 |

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்யவேண்டியவை:**

பின்வருவனவற்றைக் **கணிக்குக.**

(a) மொத்த பெறுமதி சேர்த்தல் (GVA) – அடிப்படை விலையில் (04 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில் (02 புள்ளிகள்)

(c) மொத்த தேசிய வருமானம் (GNI). (02 புள்ளிகள்)

(d) மொத்த தேசிய கையாள்தகு வருமானம் (GNDI). (02 புள்ளிகள்)

(C) பின்வரும் இரண்டு பதங்களையும் **விபரிக்குக.**

(a) பொருளாதார வளர்ச்சி (Economic Growth) (02 புள்ளிகள்)

(b) பொருளாதார அபிவிருத்தி (Economic Development) (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |